# புதுவைப் பல்கலைக்கழகம்
## தோட்டக்கலைத் துறை
### ஆர். வெங்கட்ராமன் நகர், காலாப்பட்டு, புதுச்சேரி – 14.

**விண்ணப்ப எண்:**__________ **தேதி:** ____________

புதுவைப் பல்கலைக்கழக வளாகத்திலுள்ள **தானே புயலினால் முழுவதும் சாய்ந்த** வெட்டப்பட வேண்டிய மரங்களை இருக்கின்றவை இருக்கின்ற நிலையிலேயே ஏலம் எடுப்பதற்கான விண்ணப்பப் படிவம்.

1. விண்ணப்பதாரர் பெயர் :
2. தந்தையின் பெயர் :
3. முழு முகவரி மற்றும் தொலைபேசி / கைபேசி எண் :
4. பல்கலைக்கழகத்திற்கு செலுத்தவேண்டிய உரிமத் தொகை பாக்கி இருந்தால் அதன் விபரம் குறிப்பிடவும்:
5. ஏல ஆரம்ப தொகைக்கு மேல் குறிப்பிட விரும்பும் தொகை குறைந்தபட்சம் **ரூ.100/= -க்குமேல்** இருக்கவேண்டும் என்பதை அறியவும்.

**ஏலம் விடப்பட உள்ள பகுதிகளில் முழுவதும் சாய்ந்த மரங்களின் விபரம் (Timber wood / Fire wood):**

| பகுதி எண் (Block no.) | மரவகைகள் | ஏல ஆரம்பத் தொகை மொத்த மரங்களுக்கு (Minimum Bid Amount) (ரு.) | காப்பீட்டு தொகை மொத்த மரங்களுக்கு (EMD) (ரு.) |
|---|---|---|---|
| 1. | தேக்கு ( T ) - 312<br>பென்சில் ( T ) -1400+453*<br>தைலமரம் ( T ) - 40+21*<br>பனை ( F ) - 21<br>வேம்பு ( F ) - 03<br>முந்திரி ( F ) - 72<br>ஓதியன் ( F ) - 09<br>சிவப்பு கொண்னை (F)- 04 | 33,00,000 /= | 1,65,000 /= |
| 2. | தேக்கு ( T ) -138<br>பென்சில் ( T ) -410+362*<br>தைலமரம் ( T ) - 83+126*<br>பனை ( F ) - 08<br>முந்திரி ( F ) - 08<br>ஓதியன் ( F ) - 13<br>மஞ்சள் கொன்னை (F) - 10<br>காட்டு வாகை ( F ) - 09<br>தென்னை ( F ) - 11 | 13,00,000 /= | 65,000 /= |

**( T ) : TIMBER WOOD ( F ) : FIRE WOOD***

**இடம் :** ஆர்.வி. நகர்.
**தேதி :** .02.2012.

(கையொப்பம்)
விண்ணப்பதாரர் / டெண்டர்தாரர்

| பகுதி எண் (Block no.) | மரவகைகள் | ஏல ஆரம்பத் தொகை மொத்த மரங்களுக்கு (ரு.) | காப்பீட்டு தொகை மொத்த மரங்களுக்கு (ரு.) |
|---|---|---|---|
| 3. | தேக்கு ( T) -03<br>பென்சில் ( T) -89+36*<br>தைலமரம் ( T) -97+48*<br>வேம்பு( F) - 02<br>காட்டு வாகை ( F)- 02<br>சவுக்கு ( F) - 35 | 2,00,000 /= | 10,000 /= |
| 4. | பென்சில் ( T) -690+104*<br>தைலமரம் ( T) - 30+29*<br>பனை ( F) - 13<br>வேம்பு( F) - 10<br>முந்திரி ( F) - 17<br>மஞ்சள் கொன்னை (F)- 12<br>காட்டு வாகை ( F) - 01<br>தென்னை ( F) - 04<br>சவுக்கு ( F) - 08 | 5,25,000 /= | 26,250 /= |
| 5. | பென்சில் ( T) -140+22*<br>தைலமரம் ( T) -109+83*<br>முந்திரி ( F) - 11<br>சவுக்கு ( F) - 11 | 2,50,000 /= | 12,500 /= |
| 6. | பென்சில் ( T) -204+70*<br>பனை ( F) - 01<br>வேம்பு( F) - 06<br>முந்திரி ( F) - 05<br>காட்டு வாகை ( F)- 03 | 1,50,000 /= | 7,500 /= |
| 7. | பென்சில் ( T) -369+85*<br>தைலமரம் ( T) - 50+41*<br>பலா ( T)-01<br>தீக்குச்சி மரம் ( T)- 07+03*<br>வேம்பு( F) - 16<br>காட்டு வாகை ( F)- 10<br>கொய்யா ( F) - 02<br>மரமல்லி ( F) - 03<br>நாவல் ( F) - 02<br>ஆலமரம் ( F) - 01 | 3,25,000 /= | 16,250 /= |

( T ) : TIMBER WOOD ( F ) : FIRE WOOD*

இடம் : ஆர்.வி. நகர்.
தேதி : .02.2012.

(கையொப்பம்)
விண்ணப்பதாரர் / டெண்டர்தாரர்

Contd… Pages 3 of 3

**<u>ஏற்கனவே வெட்டி வைக்கப்பட்டுள்ள மரங்களின் விபரம் (Timber wood / Fire wood):</u>**

| குவியல் எண் (Lot no.) | மரவகைகள் | ஏல ஆரம்பத் தொகை மொத்த மரங்களுக்கு (Minimum Bid Amount) (ரு.) | காப்பீட்டு தொகை மொத்த மரங்களுக்கு (EMD) (ரு.) |
|---|---|---|---|
| 8. | தேக்கு ( T ) | 2,250/= per C. Ft. | 5,000 /= |
| 9. | பென்சில் ( T ) | 4,500 /= per ton | 15,000 /= |
| 10. | தைலமரம் ( T ) | 2,000 /= per ton | 10,000 /= |
| 11. | சவுக்கு ( T ) | 1,500 /= per ton | 2,000 /= |
| 12. | விறகு ( F ) | 1,000 /= per ton | 15,000 /= |

**( T ) : TIMBER WOOD ( F ) : FIRE WOOD**

**<u>உறுதிப்பிரமாணம்</u>**

இம்மனுவின் விண்ணப்பதாரர் ஆகிய நான், இவ்விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டுள்ள அனைத்து நிபந்தனைகளையும் (1 முதல் 30 வரை) நன்கு படித்து அறிந்து கொண்டேன். அனைத்து நிபந்தனைகளுக்கும் (1 முதல் 30 வரை) நான் முழுவதும் கட்டுப்பட்டே இந்த ஏலத்தில் விண்ணப்பித்துள்ளேன் என்பதை இதன் மூலம் உறுதியளிக்கிறேன்.

**இடம் :** ஆர்.வி. நகர். **(கையொப்பம்)**

**தேதி :** .02.2012. **விண்ணப்பதாரர் / டெண்டர்தாரர்**

## ஏல நிபந்தனைகள்

1. ஏலம் நடத்தப்படும் இணையதளத்தின் முகவரி: *www.auctionindia.com*; ஏல நேரம்: 15.02.2012 புதன் கிழமை அன்று **காலை** 10.00 **மணிக்கு** ஆரம்பித்து **மதியம்** 01.00 **மணிவரை.**

2. பல்கலைக்கழகத்தில் பணிபுரியும் ஊழியர்கள் இந்த ஏலத்திற்கு விண்ணப்பிக்கக் கூடாது.

3. புதுவைப் பல்கலைக்கழக வளாகத்தில் **தானே புயலினால்** முழுவதும் சாய்ந்த மரங்களை (இருக்கின்றவை இருக்கின்ற நிலையில்) தாங்களே தங்கள் செலவில் வெட்டி எடுத்து ஏற்றிச் செல்லவும் (பகுதி 01 முதல் 07 வரை) மற்றும் ஏற்கனவே வெட்டி வைக்கப்பட்டுள்ள மரங்களை (குவியல் எண் 08 முதல் 12 வரை) எடுத்துச் செல்வதற்கான ஏலத்தில் பங்கு பெறும் நபர்கள் விண்ணப்பிக்க விரும்பும் பகுதிக்குண்டான ஏலம் விடப்பட உள்ள புயலினால் பாதித்த சாய்ந்த மரங்களை மற்றும் வெட்டி வைக்கப்பட்டுள்ள மரங்களை முழுமையாக பார்வையிட்டு சரிபார்த்த பின்னரே விண்ணப்பிக்க வேண்டும். மரங்களை பார்வையிடுவதற்கு தோட்டக்கலை அலுவலகத்தில் உள்ள ஊழியர்களுடன் அலுவலக நாட்களில் சென்று பார்வையிடலாம்.

4. ஏலத்தில் பங்குபெற விரும்பும் விண்ணப்பதாரர்கள் இணையதளம் ***www.auctionindia.com*** மூலமாக மட்டுமே **( online auction )** பங்குபெறமுடியும்.

5. விண்ணப்பப்படிவத்துடன் தற்காலிக காப்பீட்டு தொகைக்கான வரைவோலையை (D.D.) **நிதி அதிகாரி, புதுவைப் பல்கலைக்கழகம்** எனும் பெயரில் செலுத்தி, ஏலத்தில் பங்கேற்பதற்கான **பதிவு பெயரையும் (User name)** மற்றும் **இரகசிய எழுத்தையும் (Password) தோட்டக்கலைத்துறை** அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளவும்.

6. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்துடன் விண்ணப்பித்தவரின் பாஸ்போர்ட் சைஸ் புகைப்படம் இணைக்கப்படவேண்டும்.

7. விண்ணப்பத்துடன் மேற்குறிப்பிட்ட தொகைக்கான வரைவோலையை 14.02.2012 **மாலை** 05.30 மணிக்குள் செலுத்தினால் மட்டுமே ஏலத்தில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவர்.

8. விண்ணப்பதாரர் ஏதோ ஒரு காரணத்தினால் பதிவு பெயரையோ (User name) அல்லது இரகசிய எழுத்தையோ (Password) அல்லது இரண்டையும் தவறவிட்டால், முன்வைப்பு தொகைகளை மீண்டும் செலுத்தி வேறொரு பதிவு பெயரையும் (User name) மற்றும் இரகசிய எழுத்தையும் (Password) 14.02.2012 அன்று மாலை **05.30** மணிக்கு முன்பாக பெற்றுக்கொள்ளவேண்டும்.

9. தோட்டக்கலைத்துறை மூலம் பெறப்பட்ட பதிவு பெயர் (User name) மற்றும் இரகசிய எழுத்தை (Password) **தவறவிட்டவர்கள்** அவர்களால் பெறப்பட்ட பதிவு பெயர் மற்றும் இரகசிய எழுத்தை வேறொருவர் **துஷ்பிரயோகம்** செய்யாமல் இருக்க **உடனடியாக** தோட்டக்கலைத்துறைக்கு தகவல் தெரிவிக்கவேண்டும்.

10. இணையதளம் மூலம் ஏலத்தில் பங்குபெறுவது குறித்த **மாதிரி ஏலத்தினை (Mock auction)** மேற்குறிப்பிட்ட இணையதளத்தின் மூலம் 14.02.2012 அன்று மதியம் 02.00 **மணி முதல் இரவு** 09.00 **மணி வரை உபயோகப்படுத்தி அறிந்து கொள்ளலாம்.**

11. ஏலத்தில் பங்கு பெற விரும்பும் டெண்டர்தாரர்கள், விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு பகுதிக்கும் மற்றும் மரக்குவியல்களுக்கும் தனித்தனியே **ஆரம்ப *ஏலத்தொகைக்குமேல்*** தாங்கள் விரும்பும் ஏலத்தொகையினை குறிப்பிடவேண்டும். ஆரம்ப ஏலத்தொகையை விட குறைவாக குறிப்பிடப்பட்ட ஏல விண்ணப்பங்கள் கண்டிப்பாக ***நிராகரிக்கப்படும்***.

12. சென்ற ஆண்டில் டெண்டர் உரிமம் பெற்று அந்த உரிமத் தொகையை இதுவரை செலுத்தாதவர்கள் இந்த ஏலத்திற்கு விண்ணப்பிக்க முடியாது. கடந்த கால உரிமத் தொகைகளை 10% வட்டியோடு செலுத்திய பிறகே அவர்கள் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

13. ஏலத்தில் பங்குபெற விரும்பும் டெண்டர்தாரர்கள் ஏல ஆரம்ப தொகைக்கு மேல் குறிப்பிட விரும்பும் தொகை குறைந்தபட்சம் **ரு.100/= க்குமேல்** தான் குறிப்பிட முடியும் என்பதை அறிந்துகொள்ளவும்.

14. விண்ணப்பித்த டெண்டர் படிவங்களின் முடிவுகள் பல்கலைக்கழக நிர்வாக கட்டிடத்தில் ஏல பொறுப்புக்குழு அதிகாரிகள் முன்னிலையில் பரிசீலிக்கப்பட்ட பின்னரே அறிவிக்கப்படும்.

15. டெண்டர்தாரர்கள் பல்கலைக்கழகம் நிர்ணயித்த தொகையை ஏலத்தில் எட்டவில்லையென்றால் பல்கலைக்கழகம் எவ்வித முன்னறிவிப்போ, நிபந்தனையோ இன்றி அன்றோ, வேறு நாளோ மறு ஏலம் நடத்தவோ அல்லது டெண்டர் குழுவின் தீர்மானப்படி முடிவு செய்வதற்கும் பல்கலைக் கழகத்திற்கு முழு உரிமையுண்டு.

16. எந்த காரணமும் கூறாமல் டெண்டரை எற்கவோ, நிராகரிக்கவோ அல்லது இது சம்பந்தமாக வேறு ஆணை பிறப்பிக்கவோ பல்கலைக்கழகத்திற்கு முழு அதிகாரம் உண்டு.

17. வெற்றிபெற்ற டெண்டர்தாரர்கள் தங்களுக்கு கிடைக்கப்பெற்ற பகுதிக்குண்டான புயலினால் சேதமடைந்த மரங்களை மட்டும் இருக்கின்றவை இருக்கின்ற நிலையிலேயே தங்கள் செலவிலேயே ஆட்களை வைத்து வெட்டி எடுத்துச் செல்லவேண்டும்.

**இடம் :** ஆர்.வி. நகர். **(கையொப்பம்)**

**தேதி :** .02.2012. **விண்ணப்பதாரர் / டெண்டர்தாரர்**

...2..

18. வெற்றிபெற்ற ஏலதாரர்கள் ஏல மரங்களை எடுத்துச்செல்வதற்காக பணி அமர்த்தும் வேலையாட்கள் மற்றும் வாகனங்களுக்குண்டான விபரங்களை அலுவலகத்தில் சமர்ப்பித்து பல்கலைக்கழக பாதுகாப்பு அலுவலரால் [**OSD (V&S)**] வழங்கப்படும் அனுமதிச்சீட்டை பெற்றுக்கொண்ட பின்னரே ஏலம் எடுக்கப்பட்ட மரங்களை வெட்டுவதற்கும் மற்றும் பல்கலைக்கழக வளாகத்திற்குள் நுழைவதற்கும் அனுமதிக்கப்படுவர்.

19. ஏலம் பெறப்பட்ட பகுதிகளில் உள்ள ஏலத்திற்குண்டான மரங்களை முழுமையாக வேர்ப்பகுதி உட்பட எடுத்து அப்பகுதிகளை விண்ணப்பத்தில் குறிப்பிட்ட காலத்திற்குள் சுத்தம் செய்த பின்னரே அப்பகுதிக்குண்டான காப்பீட்டுத்தொகை (EMD) திருப்பி அளிக்கப்படும்.

20. முதல் மூன்று ஏலதாரர்களின் காப்பீட்டு தொகை பிடித்தம் செய்து வெற்றி பெற்ற முதல் ஏலதாரர் ஏலத்தொகையை செலுத்திய பின்னரே, மற்ற ஏலதாரர்களுக்கு காப்பீட்டு தொகை அளிக்கப்படும்.

21. வெற்றி பெற்ற டெண்டர்தாரரின் காப்பீட்டுத் தொகை விண்ணப்பத்தில் குறிப்பிட்ட காலத்திற்குள் மரங்களை எடுத்துச்சென்ற பின்னரே திருப்பி அளிக்கப்படும்.

22. வெற்றி பெற்ற டெண்டர்தாரர்கள் ஏலத்திற்குண்டான முழு தொகையினை **பல்கலைக்கழகம் குறிப்பிட்ட கால வரையறைக்குள்** செலுத்திவிட வேண்டும். அப்படி செலுத்தத் தவறினால் எவ்வித முன்னறிவிப்பும், காரணமும் இன்றி அவரின் காப்பீட்டுத் தொகையை பிடித்தம் செய்து மேலும் அந்த டெண்டர் உரிமத்தை அவருக்கு அடுத்தபடியாக பல்கலைக்கழகம் நிர்ணயிக்கப்பட்ட ஆரம்ப ஏலத்தொகையை விட அதிகமாக குறிப்பிட்டிருக்கும் டெண்டர்தாரருக்கு அளிக்கப்படும்.

23. ஒப்பந்ததாரர் பல்கலைக்கழகத்தால் அவ்வப்போது விதிக்கப்படும் நிபந்தனைகளுக்கும், பொதுக் கட்டுப்பாடு மற்றும் தனிக் கட்டுப்பாடு ஆகியவற்றிற்கும் கட்டுப்பட்டவர் ஆவார்.

24. வெற்றி பெற்ற டெண்டர்தாரர் ஏலத்தொகையை குறிப்பிட்ட காலத்திற்குள் புதுவைப் பல்கலைக்கழக கணக்கில் (A/c. no.201) வங்கியில் பணம் செலுத்துவதற்கு முன்பாக **தோட்டக்கலைத் துறை அலுவலரிடம்** வங்கி சலானில் ஒப்புதல் கையொப்பம் பெற்ற பின்னரே வங்கியில் பணம் செலுத்த வேண்டும். அவ்வாறு ஒப்புதல் கையொப்பம் பெறாமல் தொகை செலுத்தப்பட்டால் அத்தொகை ஏலத்தின் தொகையாக ஏற்றுக்கொள்ளப்படாது.

25. வெற்றிபெற்ற ஏலதாரர்கள் மரங்களுக்குண்டான பணத்தை செலுத்தும்போது, **பென்சில் மற்றும் இதர மரவேலைகளுக்கு உதவும் மரங்களுக்குண்டான மொத்த தொகையில் 10 சதவீதம் வணிக வரியும் மற்றும் தேக்கு மரங்களுக்கு 14.5 சதவீதம் வணிக வரியும்** சேர்த்து செலுத்தவேண்டும் என்பதை அறியவும். மேலும் புதுவை மற்றும் மத்திய அரசினால் அவ்வப்போது விதிக்கப்படும் வரித்தொகையின் ஏற்றத்தாழ்வுக்கேற்ப **வணிக வரியை** செலுத்தவேண்டும் என்பதையும் அறியவும்.

26. வெற்றி பெற்ற விண்ணப்பதாரர் மற்றும் உதவி பணிகளுக்குண்டான நபர்களின் விபரங்களை தோட்டக்கலை அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும். பல்கலைக்கழக வளாகத்தில் அனுமதிக்கப்பட்ட நேரங்களில் அலுவலக / காவல் பணிபுரியும் ஊழியர்கள் கேட்கும் பொழுது காண்பிக்கும் விதமாக எப்பொழுதும் **அனுமதி சீட்டை** தங்கள் வசம் பாதுகாத்து வைத்திருக்கவேண்டும்.

27. வெற்றிபெற்ற டெண்டர்தாரர்கள் ஏலம் கிடைக்கப்பெற்ற பகுதியில் உள்ள புயலினால் பாதித்த முழுவதும் சாய்ந்த **ஏலத்திற்குண்டான மரங்களை ஒவ்வொரு வகையறாவின்படி தான் எடுத்துச் செல்லவேண்டும். அதாவது, முதலில் தேக்கு மரங்களையும், இரண்டாவது பென்சில் மரங்களையும் அதன்பிறகே விறகு மரங்களான இதர வகை மரங்களை எடுத்துச்செல்ல அனுமதிக்கப்படுவார்கள்.**

28. ஏலத்தில் வெற்றி பெற்ற டெண்டர்தாரர் மற்றும் அவரின் பிரதிநிதிகள் ஏலம் கிடைக்கப்பெற்ற தேதியிலிருந்து 30 **நாட்களுக்குள்** புதுவைப் பல்கலைக்கழக தோட்டக்கலைத்துறை அலுவலர் முன் அனுமதிபெற்று பல்கலைக்கழக வளாகத்திலிருந்து **வேலை நாட்களில் காலை 9.30 மணி முதல் மாலை 5.30 மணிவரை** மட்டுமே எடுத்துச்செல்ல அனுமதிக்கப்படுவார்கள்.

29. பல்கலைக்கழக பாதுகாவலர்களோ, தோட்டக்கலை ஊழியர்களோ அல்லது நிர்வாகத்தால் நியமிக்கப்பட்ட அலுவலர்களோ கேட்கும்போது டெண்டர்தாரர் உரிமம் பெற்றதிற்கான பணம் செலுத்திய ஆதார நகலை / அடையாள அட்டையை காண்பிக்க வேண்டும்.

30. வெற்றி பெற்ற டெண்டர்தாரர்கள், ஏலத்தில் கிடைக்கப்பெற்ற மரங்களுக்குண்டான முழு தொகையையும் செலுத்திய பிறகு, மரங்களை வெளியில் எடுத்துச் செல்வதற்குண்டான அனுமதி சீட்டை, பல்கலைக்கழக பாதுகாவலர் அலுவலகம் மூலமாக பெற்ற பின்னரே அனுமதிக்கப்படும்.

**இடம் :** ஆர்.வி. நகர் **பதிவாளர்**
**தேதி :** 31.01.2012 **புதுவைப் பல்கலைக்கழகம்**

## உறுதிப்பிரமாணம்

இம்மனுவின் விண்ணப்பதாரர் ஆகிய நான், மேற்க்குறிப்பிட்டுள்ள அனைத்து ஏல நிபந்தனைகளையும் (1 முதல் 30 வரை) நன்கு படித்து அறிந்து கொண்டேன். அனைத்து ஏல நிபந்தனைகளுக்கும் (1 முதல் 30 வரை) நான் முழுவதும் கட்டுப்பட்டே இந்த ஏலத்தில் பங்குபெறுகிறேன் என்பதை இதன் மூலம் உறுதியளிக்கிறேன்.

**பெயர் :**

**முகவரி :**

**தொலைபேசி / கைபேசி எண் :** **(கையொப்பம்)**

**தேதி :** **விண்ணப்பதாரர் / டெண்டர்தாரர்**

# புதுவைப் பல்கலைக்கழகம்
## தோட்டக்கலைத் துறை

ஆர். வெங்கட்ராமன் நகர், காலாப்பட்டு, புதுச்சேரி – 14.

**புயலினால் பாதித்த மரங்களை ஏலம் எடுக்க விண்ணபித்தவர்களுக்கு உண்டான முக்கிய அறிவிப்பு**

**புதிய நிபந்தனைகள் (இணைப்பு):**

31. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை அதற்குண்டான காப்பீட்டுத் தொகையுடன் மூடி முத்திரையிட்ட உரையின் (cover) மேல் **"புயலினால் பாதிக்கப்பட்ட மரங்களை ஏலம் எடுப்பதற்க்கான விண்ணப்பம்"** என்று குறிப்பிட்டு புதுவைப் பல்கலைக்கழகம் பதிவாளர் அலுவலகத்தில் இதற்காக வைக்கப்பட்டுள்ள ஏலப்பெட்டியில் (Tender box) எதிர்வரும் **14.02.2012** அன்று **மாலை 5.30 மணிக்குள்** செலுத்த வேண்டும்.

32. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை தபாலிலோ (By post) (அ) கொரியர் (Courier) மூலமாகவோ அனுப்ப விரும்பும் விண்ணப்பதாரர்கள் **"பதிவாளர், புதுவைப் பல்கலைக்கழகம், ஆர்.வி. நகர், காலாப்பட்டு, புதுச்சேரி – 605014"** என்ற முகவரிக்கு **"புயலினால் பாதிக்கப்பட்ட மரங்களை ஏலம் எடுப்பதற்க்கான விண்ணப்பம்"** என்று அனுப்பும் தபாலின் உரையின் மேல் குறிப்பிட்டு **14.02.2012** அன்று **மாலை 5.30 மணிக்குள்** வந்து சேருமாறு அனுப்ப வேண்டும்.

33. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களுக்கு உண்டான பதிவு பெயர் (User name) மற்றும் இரகசிய எழுத்து (Password) இவ்வலுவலகத்தின் மூலம் விரைவு தபாலிலோ (Speed post) (அ) கொரியர் (Courier) மூலமாகவோ விண்ணப்பத்தாரர்களுக்கு அனுப்பப்படும் என்பதை அறியவும்.

34. பல்கலைக்கழக முடிவின்படி, விண்ணப்பதாரர்கள் ஏலத்தில் பங்குபெறுவதற்குண்டான பதிவுப்பெயர் (User name) மற்றும் இரகசிய எழுத்து (Password) அகியவற்றை தபாலின் மூலமாக மட்டுமே அனுப்ப வேண்டியுள்ளதால், இதற்க்கான ஏலம் 20.02.2010 **திங்கட்கிழமை அன்று காலை 10.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை** நடைபெறுவதாக தள்ளி வைக்கப்பட்டுள்ளது என்பதை அறியவும்.

**மாற்றி வைக்கப்பட்டுள்ள ஏல தேதி: 20.02.2012; நேரம்: காலை 10.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை.**

**இடம் :** ஆர்.வி. நகர்
**தேதி :** 06.02.2012

**பதிவாளர்**
**புதுவைப் பல்கலைக்கழகம்**

ஏற்கனவே குறிப்பிட்ட 30 நிபந்தனைகளோடு, மேற்குறிப்பிட்ட புதிதாக சேர்க்கப்பட்டுள்ள (04) நிபந்தனைகளையும் நன்கு படித்து அறிந்து கொண்டேன் என்பதை உறுதியளிக்கிறேன்.

**(கையொப்பம்)**
**விண்ணப்பதாரர் / டெண்டர்தாரர்**